926

உ
சிவமயம்.

ஸ்ரீ கௌரிமாயூரம் பட்டமங்கலம்
வேளாளத்தெரு ஆயுர்வேத பாஸ்கரன்
அருட்கவி பஞ்சபக்ஷி சோதிட சிர்ப்பரான
சுவாமி
அறிவானந்தா அவர்களால்
இயற்றிய

# ஸ்ரீ புள்ளிருக்குவேளூர்
# வெண்பாவந்தாதி.

926
4-19

---

தருவைமானகர் தமிழ்த் தலைமைப்புலமை பீடரும்
ஸ்ரீலஸ்ரீ **K.** சபாபதிபிள்ளை அவர்களின்
புத்திரரும் மாணவருமான
பிர்மவாதி **K. S.** இரத்தினம் பிள்ளை
அவர்களால் பரிசோதிக்கப்பட்டது

இந்நூல்
திரிசிரபுரம் கனவான் அனந்தராம நாயுடு குமாரரும்
பினங்கு டிரஷரி ஆபீசருமான
ம. சுப்பையா நாயடுகார் அவர்கள்
முயற்சிவலத்தால்

...ராளம் திருமீயச்சூர்
...த்தியா அச்சுக்கூடத்தில்
...திப்பிக்கப்பட்டது.
...] 1919. [விலை அணா 2.

0-,1MAA4,ஓ
N19
178569

உ

சிவமயம்.

ஸ்ரீ கௌரிமாயூரம் பட்டமங்கலம்
வேளாழத்தெரு ஆயுர்வேத பாஸ்கரன்
அருட்கவி பஞ்சபக்ஷி சோதிட சிரப்பரான
சுவாமி
அறிவானந்தா அவர்களால்
இயற்றிய

# ஸ்ரீ புள்ளிருக்குவேளூர்
# வெண்பாவந்தாதி.

---

தருவைமானகர் தமிழ் தலமைபுலமை பீடருமான
ஸ்ரீலஸ்ரீ **K.** சபாபதிபிள்ளை அவர்களின்
புத்திரரும் மாணவருமான
பிர்மவாதி **K. S.** இரத்திநம் பிள்ளை
அவர்களால் பரிசோதிக்கப்பட்டது

இந்நூல்
திரிசிரபுரம் கனவான் அனந்தராம நாயுடு குமாரரும்
பினுங்கு டிரஷரி ஆபீசருமான
டி. சுப்பையா நாயடுகார் அவர்கள்
முயற்சிவலத்தால்

பேரளம் திருமீயச்சூர்
பிர்ம்ம வித்தியா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்.] 1919. [விலை அணா 2.

10 DEC 1919
4·19

1413
8948111

-600 008

178569

இந்நூலை

அச்சிலிட வுதவிபுரிந்தவராகிய பினங்கு
டிரஷரி ஆபீசரும்

திரிசிரபுரம் கனவான் அனந்தராம நாயடுகார்
குமாரருமான

டி. சுப்பையா நாயடுகாரவர்கள் மீது
பாடிய

(நேரிசை வெண்பா.)

சீரார்புள் வேளூர் திகழ்வெண்பா வந்தாதி
பாரோ ரறியவச்சிற் பாலித்து—நேராகத்
தந்தான் றிருச்சி தகுமனந்த ராமன்சேய்
சுந்தரனும் சுப்பையனே.

இஃதுமவற்கு.

சாந்த குணசீலன் றக்கோ ரவையிருப்பன்
ஏந்தலென நாளு மியற்கையோன்—காந்தியுறு
சொல்லின் விசேடகுண சுப்பைய நாயடுதா
னில்லமுளா னன்பிற் கிசைந்து.

திரிசிரபுரம் அ. சிவானந்த சாகர யோகீஸ்வரர்
மாணவரி லொருவராகிய

மதுரை அரங்க இராஜ குமரானந்த சுவாமிகளாலியற்றிய

(நேரிசை வெண்பா.)

உள்ளிருக்குந் தீயவிரு ளோட்டி அறிவானந்தன்
புள்ளிருக்கும் வேளூர் புனிதன்சீர்—தெள்ளுதமிழ்
அந்தா தியாக அறைந்தா னுலகோர்வெம்
பந்தாதி நீங்கப் பரிந்து.

---

மாயூரம் புதுத்தெரு சிதம்பரமடம்
ஸ்ரீலஸ்ரீ. அம்பலவாண தேசிகரவர்களால்
இயற்றியது

சிதமதிதவழ் சென்னிச் சிவனலால் வேறெவையும்
போதவரா தென்றன்னப் புள்வேளூர் வெண்பாக்
கோதிலந் தாதியொன்று கூறுமறி வானந்த
ஞோதிஞன் வேதாந்த மூலகினிறைதவ முறவே.

பேரளத்தைச் சார்ந்த அகரக்கடுவங்குடி
ஸ்ரீலஸ்ரீ. வாலாம்பிகை சுவாமிகளாலியற்றியது
(நேரிசை வெண்பா.)

நீதி நிறைபோத நிச்சயத்தி னுட்பொருளை
யோதி யுணர்ந்திட் டுலகுய்ய—பேதமற
புள்ளூரந் தாதி புகன்றான் புகலறிய
தெள்ளறி வானந்தன் றேர்.

நன்னிலந்தாலுக்கா
பேரளத்தைச் சார்ந்த 22 நெ. கூத்தனூரிலிருக்கும்
ஸ்ரீலஸ்ரீ. சிவராஜயோகி பரசுராம பிள்ளையவர்களால்
இயற்றியது,
(நேரிசை வெண்பா.)

அள்ளிக் கொடுக்குமறி வானந்த னன்பாகப்
புள்வேளூற் கந்தாதி போற்றினான்—கள்ளமறுத்
தின்பமழை பொழியு மிவ்வெண்பா நூறும்வினைத்
துன்ப மறுக்குமெனச் சொல்.


---

தருவைமாநகர் பிளீடரும் தமிழ் தலைமைப் புலவருமான
ஸ்ரீலஸ்ரீ. சபாபதிபிள்ளை புத்திரரும் மாணவருமான
பிர்மவாதி **K. S.** இரத்தினம்பிள்ளை
அவர்களியற்றிய நிலமண்டலி ஆசிரியப்பா.

---

விசும்பிடை கிடந்துருள் விளங்களி கடுப்ப
வாணையிற் கதிர்க்கு மண்டத் தொகுதியும்
வெண்டிரை பொருதெழு மண்டிணி நிலனும்
அவ்வயிற் செறியுஞ் செவ்விய தோற்றமும்
பல்வகைப் பொருளுந் தோல்வினைத் தொடர்பு
மாண்பெண் ணலியெனு மாண்புறு பகுப்புங்
கவ்வையி னுழலலுங் கழிதலுங் களித்தலும்
பிறத்தலும் பின்னர் இறத்தலு மாகிய
விவையெலாந் தேர்ந்து நவைதீர் பரமன்
முத்தொழி லாளன் வித்தக னொருவன்
இறையென முன்னோர் மறைவழி கூற
அளப்பரும் பெருக்கினை யிலக்கணப் படுத்தலின்
சடஞ்சித் தென்னத் திடம்படு பொருள்களின்
ஒன்றினுக் குயர்வை யூட்டி விரித்து
நாத்திகம் பேசியும் நானே யென்றும்
நித்திய மாகும் வித்தைக் குடன்றே
யற்பக நீத்துக் கற்ப மருந்தியுந்
தீயவை யடாது வாயுவை யடக்கியும்
அறிவு மன்பு மணைதரு னீதியும்
அழிக்குனர் கிடப்ப விழிக்குனர்க் கிரங்கி
கல்லா லமர்ந்த வல்லா னுரைத்த

சரியை கிரியை யோகமா ஞான
நாற்பத வுதவியின் மேற்பதம் பெறூஉம்
சமரச போத வுயரிய நெறியாம்
அகன்ற புணரியி னாழ்ந்த பொருட்களை
யெளிதி னுணர்ந்து விரைவிலின் னருள்பெற
வியன்புள் ளிருக்கும் வேளூர்த தனிசேர்
வியன்புள் ளிருக்கும் வேளைப் பயந்த
வந்தா தியற்ற செந்தா ளினுக்கோர்
அந்தா தியற்ற வெண்பா விலிட்டான்—அவனே
பூவிரி கடுக்கை தேவருக் களித்துக்
காவிரி கரைசேர் காவிரித் துறையின்
சுப்பிர மணிய மெய்ப்பர னார்தியாச்
செப்பிர மணியச் சீர்மயில் வரத்தின்
அப்பெய ரணைந்த திப்பியப் பதியோன்
தோளான் மலிபுகழ் வேளாண் குலத்திற்
றமிழ்வளன் பழனி யமிழ்தினிற் கவிபயில்
புலவர் மரபிற் பொள்ளா மணியாம்
மாகோ பால சாமி வரத்தின்
மதிக்குலப் புலவோர் துதிக்க விதித்தோன்
சோதிட மருத்துவத் தொன்னூற் பழகி
மாதிடத் தவனடி மன்னு முளத்தின்
நாற்கவி கவிக்கும் நாவுடைத் திருவன்
அறிவா னந்த மளக்குங் காலை
யறிவா னந்த மாவ துணர்ந்தே
யறிவா னந்த னுய பெயரி
னணையுமெம் மாதுல னையன் மாதோ.





# புள்ளிருக்கு வேளூர் வெண்பாவந்தாதி.

## அவையடக்கம்.

ஏகம் பிரமமென் றெண்ணுதற்கிங் கின்னூலின்
போகமுறு மல்லார் புணர்வரோ—யூகமுடன்
கற்றவர்கள் குற்றமெண்ணார் கற்றிலர்சொல் குற்றமெது
மற்றவர்க ளெம்போல்வார் மன். (1)

## இஃதுமது.

மன்னுங் கலியாதி மார்க்கமுறும் போதலாற்
றுன்னற் கிடமுண்டோ சொல்லுவீ—ரின்னூலை
வேண்டுவோற் கென்றும் மிகுபொருளைக் காட்டுமால்
காண்டற் கினியதெனக் காண். (2)

உ

சிவமயம்.

புள்ளிருக்குவேளூர்

# வெண்பாவந்தாதி.

## நூலின் காப்பு.

வெண்பாவைக் கொண்டு விளங்கும் புவிபிலோர்
வெண்பாவைக் கிட்டிப் பெருமுத்தி—கண்மணியாம்
புள்வேளூர் வெண்பா புகலவின்று ளென்னறிவில்
விள்ளருளாய் நிற்குமந்த வேள்.

## நூல்.

வேளூரில் வாழும் விமலனே நின்னடிக்கிங்
காளாக வெண்ணி யருள்செய்தும்—நாளுமிக
மாயை மலக்கன்மம் வண்மையில் லாணவமும்
ஓயமருந் தெற்கிங் குரை. (1)

உரைப்பாயென் றேங்கி யிருந்துன் செவிக்கு
யுரைப்பாரி லுற்றென் கவலை—வரையின்றி
நீதியெடுத் தோதுவார் நேருண்டு வுண்டுகாண்
வாதமறச் சொல்லும்பேர் மட்டு. (2)

மட்டென் றறிந்து மலரடியைப் போற்றுகிறேன்
பிட்டுக்கு மண்சுமந்த பித்தாகே—ளெட்டிரண்டுங்
காணுவிப் பேதையினைக் கண்பார்த் தருள்செய்து
பேணு யகத்திருந்து பேசு. (3)

பேசில் மனமும் பிறியா துணைவிட்டிங்
காசை பலது மழிந்துவிடும்—நாசிநுனி
வாசியது காட்டும் மவுனவெளந் தான்பெருகுந்
தேசிக நின்னன்பாற் றினம். (4)

தினமொன்று தோன்றுந் திரியுமது டிங்கெட்
கினமொன்று தானறியா யேழை—மனமதுவுந்
தோன்று மிடமறிந்து சுட்டினு லவ்விடத்தே
ஆன்றோ யறமதுவே யாம். (5)

ஆமெனவும் ஊமெனவும் அப்பாலே மாவெனவும்
ஓமெனவு நாலு முரைத்திடுவார்—நாமறியேம்
அக்கரமே தோன்று மிடமறியா ரஃதறிந்தால்
நக்கனருள் பாதமாம் நாடு. (6)

நாடில் விடயசுகம் நாடாது நம்பற்றி
தேடும் பரம சுகந்தினமே—கூடுங்காண்
நிட்டை யதுவாகும் நேருமே யானந்தம்
பட்டப் பகலாம் பகர். (7)

பகர்வார் பலவாய் பரதேயம் சுத்தி
புகுவார் மனைக்கே புசிப்பர்—அகமும்
இருக்கு மிடமணுகா ரெப்போதும் வெள்ளப்
பெருக்கை பெறவறியா தார். (8)

அறியாதா ரென்சொலினு மாங்கறியா ராசை
பிறியார் வினையாற் பிதற்றி—உறுதியினை
யின்னதெனத் தேடா ரிதவசன மேபகர்வார்
தன்னைத் தெளியாத தால். (9)

தெளியாத புன்மனத்தாற் றேசமெலாஞ் சுத்தி
களியாது மில்லாக் கசடர்—ஒளியார்
குருபாதம் நாடாது கோதையர்பால் கூர்ந்து
கருபாத மேசார்வார் தாம். (10)

தாமார் தலைவரார் தாமறிவ தேதவையின்
நேமமதை யாருரைப்பார் நிச்சயமாய்—பூமிதனிற்
றேடியவர் பாதமதைச் சேவித்துச் சீலமதாய்
கூடியுற லஃதே குணம். (11)

குணமூன்றின் கேடற்று கோதறவிங் காய்ந்து
கணமீ தறிவிற் கலந்தாற்—குணர்வுதான்
ஞானாய் விளங்கும் ஜகமெலாந் தான்றுதிக்கும்
வானமுத மூறும் வழிந்து. (12)

O-11MAA41P
H19

வழியி லிருந்து மவுனவெள முண்டங்
கழியாத நிட்டையா னந்த—மெழுமங்
கணிமா திகள்கண் டதனில் விருப்பம்
அணுவளவு மில்லா தறி. (13)

அறியிற் குறிகுணங்க ளாகா ததுவும்
பிறிவுற் றிருக்காது பேணு—சிறிதின்பம்
கண்டவற்கே காக்ஷியலால் காணார் வெரும்பலுக்கு
விண்டதினா லென்கண்டார் வீண். (14)

வீண்வாதம் பேசில் விழுப்பொருளும் சிக்குமோ
காண்வாதம் பேசிற் கருத்துண்டோ—பூண்வாத
மில்லா விடத்தி லிறையருளா மல்லாது
சொல்லாரின் சொல்லின் றுணிபு. (15)

துணிந்தவற்கே யன்றி சுகமேதிம் மாயை
கணமேனும் நீங்கவழி காணார்—மணிமாலை
நாயகனும் வேதன் நவலிந் திரனாதி
தீயரென வெய்த்தார் தினம். (16)

தினஞ்செல்லா தெண்ணி திகழ்மாயைக் கோர்சொல்
கனவினுமே நீங்காமற் கண்டு—மனமொடுங்க
சாதித்தாற் கல்லாற் றகர்க்கும் தகர்க்குமெனப்
போதித்தான் நாதான் புகல். (17)

புகலுவாய் நாளறிவு போதலிலாத் தன்மை
சகலமறை யாகமமும் சாற்று—மகிலமிசை
தீயகுண மற்று சேரயிருப்பதுதான்
நாயமது வென்றே நவில். (18)

நவிலுங் கரணமுதல் நாளும் பொறியிற்
றவழு மனக்குரங்கு தாவா—புவியதனில்
செய்வதே பூசையலாற் செம்மலர்கொண் டேத்திநா
ளுய்வதில்லை யென்னநீ வோர். (19)

ஓர்ந்திடுவாய் நீதா னுலகமெலாம் சுற்றிகங்கை
சார்ந்தா லழுக்கிலையோ சாற்றுவாய்—நேர்ந்த
மனக்குரங்கிங் கற்றவிடம் மாகங்கை தானும்
தனக்குறங்கு வீடுமது தான். (20)

தானணிதல் பூதியல சாக்ஷியது சாம்பலாம்
மோனவனுக் குங்குறியை முட்டாற்கீ—தீனமெனக்
காட்டினன் வேடமது காட்டினதிற் பூட்டிமனம்
நாட்டுநெறி யேநல் லது. (21)

அதுவிதுவென் றன்ன தசையாம லொன்றாய்
பொதுவாம் நிலையே புருவம்—கதிர்கிரணம்
வீசுமே யென்றும் விளங்குமனு போகநிலை
மாசிலனு பூதியென வாழ். (22)

வாழ்வுள்ளார் தாழ்வுள்ளார் மற்றுமுளார் வையகத்தில்
மூழ்குமக்க வித்தை மணியென்று—தாழ
வணிந்தாற் பயனென்கொ லக்கமணி கண்ணாய்
துணிந்தசை யாதணியச் சொல். (23)

சொல்லெல்லாம் வேதம் துகளறவே கண்டுமிநாள்
நல்லகுரு பான்மொழியை நாட்டியே—எல்லைதனை
ஈதென் றுரைக்கா திருந்தபடி காட்டியே
ஓதென் றெனையுரைத்தா னாண். (24)

ஊணுவதும் மோனம் வுறங்குவதும் யோகநிட்டை
பூணுவதும் பூதி புகன்றதினால்—வீணாய்
போக்காது நாளும் புதுமையில்மா மாயைதனை
நீக்க வழியறிவாய் நீ. (25)

நீசொரூபன் றானே நிரதிசயா நந்தநிலை
ஆசை யறவேபோந் தாளுவாய்—தேசமதில்
வேதாந்த மன்றியிங்கு வேறுமிலை சன்மார்க்கம்
நாதாந்த முத்தியது நல்கு. (26)

நல்கினு லெப்போதும் நாதனருளேயுவந்து
பல்கா லுனைவந்து பற்றுமே—இல்குகந்த
தையலோ டுற்றாலுந் தான்றளரா வானந்த
மையமிலை நீயே யறி. (27)

அறிவே பிரம வறிவேயா னந்தம்
அறிவேதான் சீவற்கு ளாரும்—பிறிவிலா
இன்பமதைக் கண்டங் கிருந்தார் சுகாதி
தன்பெருமை கண்டு தனி. (28)

தனிப்பது தான்மனமும் தன்னறிவிற் றேன்றி
தனிப்பது வேமுத்தி தானுகும்—சனிப்புதான்
கிட்டுமென் றெண்ணு கெடுதியில் லான்பாதம்
வெட்டெனவே காண்பதுவும் மேல். (29)

மேலெடுக்க ஜென்மம் விரும்பே லதிகட்டம்
காலிடுக்கு வந்துவங்தென் கண்டாய்நீ—மாலுடுக்குங்
கந்தைதா நீக்கிக் கவியும் புதிதேபோல்
விந்தைபா ரென்சொல்லே வேண்டு. (30)

வேண்டுமன் னாள்சுரரும் வேந்தருமே யிப்புவியில்
மாண்டுபின் வந்தகதை மட்டறிவாய்—நீண்டயுகம்
ஒன்றே பலவோ வுதித்தொடுங்கும் நீயறியாய்
என்றும் நிலையெதுகா ணிங்கு. (31)

இங்குருவம் முன்பி னெடுத்தவர்க ளாருளார்
தங்கினர்க ளுண்டோ தனித்துரையாய்—எங்குமாய்
தோற்றுவதும் நாளழிவாய் சொல்லுகின்ற தேமறையும்
நேற்றிநீ தோன்று நினைந்து. (32)

நினைவாய் சகுணமாய் நீயற்று லஃதும்
பினையுமில் நிற்குணமாய் பேணு—முனக்குள்
பிறப்பொய்தா வின்பம் பிளாய்கேள் மனமும்
இறப்பதற்கே எண்ணி யிரு. (33)

இருப்பாய் நினைவிட் டிருப்பாய் மவுன
மிருப்பாய் துறந்துநசை யின்றி—பொருப்புதனை
நாடித் திருந்துமென் நாயகனைத் தன்னுளத்துள்
கூடித் தினமிரிந்து கொள். (34)

கொள்ளேல் பலவாகக் கூருகின்ற மார்க்கத்தில்
விள்ளா துணைமறைக்கும் வீண்போதம்—பிள்ளாய்கே
ளொன்றே பிரமமதா யுற்றுலகிற் றூனைக
நின்றே யிருக்குமதில் நேர். (35)

நேரும் பிரமம் நினைப்பு மறப்புமில்லை
சேருங் கருப்பூரத் தீபம்போல்—சாரும்
வினையுமில்லை பேதம் விளக்கமில்லை நாளுந்
தனையன்றி வேறுமில்லை தான். (36)

தானன்றி வேறு சமயவா தங்களில்லை
கோனிலா தொன்றசயக் கூடாது—வானமது
இல்லாது வேறெங் கிருக்கின்ற தோர்வடிவம்
புல்லாமற் புல்லி புணர். (37)

புணர்ச்சிக் கினியவனூர் போய்புணர்வ தெங்காம்
புணர்ச்சிக்கு முன்பின் பொருளில்—வுணர்ச்சி
இருக்குமோ நீயார்வா யின்றே லதுவே
இருக்குதென் றூல்காண யில்லை (38)

இல்லையென்று நான்சொன்னே னில்லையென் றூர்சொல்
மல்லபாதே புத்தி மயங்கி—நிலைகெட்டுப்
போகாதே நாளும் புலன்வழியைத் தேடிநின்று
சாகா திருந்தறிவிற் சார். (39)

178569

சாரும் பணிவேண்டிற் றக்கபொன் னேயிடமாம்
சாரும்பொன் னிற்கிடமே தக்கபணி—நோய்த்தா
னுன்னிடத்தி லேதோன்று முற்று லதுவொளிக்கும்
பின்னுமில்லை மாயைகாண் பேர். (40)

பேரறிஞ சற்றே பிரிதலி லாமணமும்
நேருருவ மின்றி நிறைந்துலவ—சாருதற்கு
தேடினன் பூகண்டான் றேர்ந்தமண மங்கிலையென்
றோடினன் பூவில்மண முற்று. (41)

உற்றதென்கொல் சத்தா வுருதது தானசத்தா
சிற்றுருவ மோமாயைத் தேறுவாய்—சற்றுமதை
நோக்கவொண் ணாநீயும் நுண்ணிழலை மூடிபின்
காக்காவுங் கூடாது காண் (42)

காணும் புனலெனவே கானலிடத் தேபுக்கி
தோணும் பொருளிலா துக்கித்து—வீணாக
மாயை வடிவம் வளர்ந்தழிவ தேயுற்றால்
ஞாயமோ விப்புவியின் நண்பு (43)

நண்பாகா தோற்றமும் நாதாந்த மேஞான்றும்
பண்பாக வேயிருக்கிற் பற்றில்லை—தண்ணீரின்
மீதுற்ற கஞ்சமும் விண்கதிரால் விள்ளல் போற்
றீதில்லா ருள்ளமெனத் தேற் (44)

தேறுநற் குள்ளமதிற் றேசோ மயமாகும்
கூறுநற் சொன்முடிவைக் கொண்டாக்கால்—ஏறுது
பாசவினை யற்றுவிடும் பல்காலு மானந்த
நேசனைப் காட்டும் நெறி (45)

நெறிகெட்டு நீகெட்டு நின்போதங் கெட்டுக்
குறிகெட்டு தானதுவாய்க் கொண்டால்—உறுதி
வடிவமே தானாகி மாகதிர்போ லெங்கும்
வடிவுள்ளே தானாவாய் மன் (46)

மன்னுசொல் யாதுமில்லை மாகால தேசமில்லை
துன்னுருவ மில்சுயங் சோதியாங்—கன்னல்
கசக்கு மதுகசக்கா கண்டாற்கில் சென்மம்
கசக்கும் செனனமறக் காண். (47)

காணப்ப னன்னாட் களிசிவா நந்தமதை
லூணக் கருத்தா யுலகமதில்—வேணி
மதிவைத்தா னாட்டால் வருந்த வருமென்
மதித்தான் குருவின் மலர். (48)

மலருரு தேன்போல மன்னகத்து ளன்பு
பலநாளும் சம்பந்தன் பற்றி—கலகமில்
ஞான மயமாகி நாளுலகிற் போற்றவே
கோனதுவாய் நின்றான் குறி (49)

குறியிலான் றன்னைமுன் கோதி லுளத்துப்
பிறியமாய் சுந்திரனும் பேண—வுறியவோர்
தொண்ட, னெனநாட், டுதிக்கவே, முத்திநிலை
கண்டெனக் கண்டு களி (50)

களிதருமென் றின்சொற் களிவா சகன்றான்
களிதருவான் பற்கோலங் கண்டு—வெளியிற்
கலந்ததினால் ஞான்றுங் கழருதே பன்னூல்
நலந்திகழ பற்றறுப்பாய் நன்று (51)

நன்றுறவே பத்ரகிரி நற்சேந்த னாதிமுன்
வென்று புலனாதிகள் விட்டுமே—மன்றுளார்
கூத்தனவ னாட்டுக்கே கோதறவே தானிசைந்து
வாத்துபெற நின்றார் வரை (52)

வரையிலா வானந்த மாகடலின் மூழ்கி
புரையிலா நற்றுறவு பூண்டான்—திரிபிலா
பட்டினத்து பிள்ளைதான் பல்வினையைத் தின்னற்கு
பட்டகட்ட மெத்தவுண்டு பார் (53)

பாரிற்றாய் மானன்கேள் பற்றறுத்தா னூன்முறைபோல்
பாரிதுவென் றன்னப் பனுவ லுறும்—நோய்சொற்
குற்றமறக் கற்றபடி கோதிலா நிட்டையே
நற்றுறவு தானதுவாம் நாடு. (54)

நாடுடலுக் கன்னமது நற்கனியோ டுபலதும்
தேடியபின் நாளளவாய் தின்னற்கு—நாடும்போ
லீசற்கு நீதா னினியவமு தானாக்கால்
பாசமுளை வீசாது பாழ். (55)

பாழாகுந் தத்துவப் பைசாசம் பற்றிநாள்
ஏழை மதிபோகா தென்றுநி—நாழி
முளைகண்டு புக்கி முழுதறிவாய் நின்று
தனையொழிக்க சன்மார்க்க மாம். (56)

ஆமென்று பன்னா ளமுதகுண மாகியே
நாமென்ற வேங்கைதான் நாடாது—ஓமெனும்
வாளாற் றுணித்ததனை வாழ்ந்திடுவா யண்ணலடி
கேளா யுனையடையுங் கீர்த்தி. (57)

கீர்த்திதரு மூர்த்தி கிளர்ஞால மேவடிவாம்
பார்த்தறிக நின்னுளத்திற் பண்பாய்நீ—சீர்த்திமிகு
நிட்டை தனில்மேவி நின்றவர்க் கேயல்லால்
தட்டுமோ தட்டாது தான். (58)

தானவனாய் நிற்கத் தருநிருவி கற்பமதி
லீனமிலா தென்று மிருந்திடவே—ஞானகதிர்
வீசுமே யெப்போதும் வேறுபே தங்காணு
மாசிலா நின்வடிவ மே. (59)

மேலென்றுங் கீழென்றும் விண்வாதம் பேசிநீ
காலனது பாசத்துக் காளாகா—ஞாலமதே
நின்னுள்ளே தோன்று நிலையைகா ணென்ஞான்று
மன்னமது பார்த்தறிகி லாய். (60)

ஆய்ந்திடுவாய் தன்னைத்தா னாய்ந்தவிடத் தேமனமும்
மாய்ந்திடுங் கேள்பிரம மாவடிவம்—தோய்ந்
திருந்தவிட மேமுத்தி யேஞேபன் மார்கம்
துரிதமல நீயறியச் சொல். (61)

சொல்லின் முடிவைத் துடர்ந்தாள்நீ மர்க்கடம்போ
லெல்லையி லானந்த மீதாமே—தொல்லை
வினைதீர்ந் ததுவாவாய் விண்மண்ணோர் போற்ற
வுனைவிழுங்கும் ஞான வொளி. (62)

ஒளியி னொளியறிந் துத்தமரே யானார்
வளியின் வழியறிந்த மார்க்கர்—களக்கமிலார்
முன்னுண்டு, பின்னுண்டு, மூதறிவு மாகுமே
என்னுண்டு காணு திடத்து. (63)

இடத்தி லுறுமதியென் றேத்தா தினிகே
ளிடத்தி லுறுமதியென் றெண்ணு— மடத்தில்
விளங்கா திருவுண்மை வீறுடனே சென்று
களங்கமிலான் றன்சபைக் கார். (64)

காரிருள்போன் மூடுங் கடுமாயக் கட்டறுக்க
சேருளத்தின் முன்மொழியை சிந்திக்க— பாரிலோர்
சாதனமே யீதாகும் சறகுரவன் சொற்கண்டும்
போதனையே னீமாணு போ (65)

போக்கும் வரவும் புணர்வுமிலை நீயறிந்தாற்
றூக்குமுனே யானந்தந் தானுமிலை— நோக்கம்
சுகநிட்டை லூனுமம் சொன்மனுவா மேவல்
தருந்தபசி யில்மோக்கம் சார். (66)

சாரிரவு புக்கினபின் றானுதய பானுபோற்
சீரருட் செல்வமுளார் சேவைகண்— டாருதற்கு
தேடியுற வாடுதலும் சிற்சொரூப போகமதில்
நாடிடுவா ரென்றுரைநீ நயந்து. (67)

நயந்து மொழிபேசி நாடுபொருள் வேண்டார்
நயந்திட் டாலன் நயங்கள்— வெயின்மஞ்சள்
தானென் றுலகோரின் சத்திதன் றெண்ணியே
மோனமதிற் றன்கொள் முறை. (68)

முறைகேளாய் பாலன் முதுபேயர் பித்தென்
றுறவுகொண் டெங்குஞ்சென் றோர்தல்— சிறந்த
அரயராய் வாணிபரா யாங்கில்லைத் தொன்றி
புரையணுகா தற்றிடுவார் போற்று (69)

போற்றுநன் றூல்போல் புரையறு யோகத்தி
ஆற்றமே நீநாளு மொன்றுவாய்—யாற்றல்
குடிகொண்டு மோனவெளங் கோதறவே தான்கொள்
படிகநிர மாகுமனம் பார். (70)

பாருறுமுன் பாசப் பருங்காவி பற்றினதால்,
நேருறும் சென்மமெலாம் நின்றிளைத்து—சீராகு
மிப்பிறவி தான்கண் டினுங்காவி யேருமு
லொப்பிலான் றன்னடிக்கே வோர். (71)

ஓர்தலே நின்னுளத்தி லோர்தலே நின்னறிவு
ஓர்தலையே நீயறிந் தோருவாய்—நேராகக்
கண்டவற்கு காக்ஷியலால் காணர் வெறும்பேச்சு
சண்டநிடம் வாய்திரவார் தாம். (72)

தாமுடலுக் காதாரம் தாமாதல் போற்காணும்
நாமரூ பங்கட்கும் நாடிடுவாய்—காமமறுஞ்
சாதனத்துக் காதாரந் தான்சொரூப மானதாற்
றீதமிலை நீயறிந்து தேற். (73)

தேறுநீ ரூபமறச் சின்மயா னந்தமதி
லேறிடும் போதமங் கேகமாம்—மாறு
திருப்பதே முத்தியென் றெங்குரவன் சொற்கேட்
டிருப்பதே நானுரைத்தே நின்று. (74)

இன்றுகேள் முன்னிலைவிட் டெண்ணளு முன்னையே
நன்றிதுவென் றேத்தியுரு நாளறுப்பாய்—மன்றமே
சித்தகத்துள் இருக்க சிதம்பரமென் றோடினல்
வித்தகனைக் காணுவரோ வீண். (75)

வீணுகுங் காவிதான் வெண்டுசு தூளேறும்
மாணுவிவ் வேடம்பொய் மன்னறிவைக்—காண
வுடையேது மாநடையே னேதுபத ரட்சை
குடையேது மாமடமேன் கூர். (76)

கூரறிய மெய்போதங் கொண்டுநாள் பற்றறுக்க
பாரறிய வேடங்கள் பற்றுதலேன்—நேராகச்
சிந்தையை யோர்நிலையாய் செய்வதற்கு மோனத்தின்
றந்திரங்கொள் வேடமே தான். (77)

தானன்றி வேறு சகமுழுது மேபார்க்கிற்
றூனன்றி வேறில் தனித்தவிடம்—ஈனமிலா
துற்றவற் கிதொக்கு மிங்குறூர்க் கங்கில்லை
பெற்றிலர்க்கோ சேய்சுகங்காண் பேசு. (78)

பேசறிய முத்திநிலை பிறந்திறந்த பின்னோநின்
யோசனைநன் மாணு யுரைத்திடுவாய்—மாசில்
அறிவாகும் சேய்பிறந்த வக்கணமே முத்தி
யறிவிழிந்தார்க் கென்சொல்வே னங்கு. (79)

அங்கிங்கென் றேடி யலைந்தாற்கென் முத்திநிலை
யெங்குறுவர்க் கேது யெடுத்துவுரை—துங்கமதி
யுள்ளவற் குள்ளமதி லோர்சிவமே லிங்கமெனக்
கள்ளமறப் பூசைசெய்து காண். (80)

காணுதற்கு பன்னாள் கனிந்துகனிந் தேற்றலே
பேணறிவு சற்றே பிறக்குமே—மாணுநீ
யேதமறுங் காலங்க ளெண்ணாது நன்னிட்டை
சாதிக்க தானதுவே யாம். (81)

ஆமிதயத் துள்ளேதா னந்ிபக வில்லாத
சேமமுயர் பானு தினமுதிக்க—நேமம்
அருந்தவரைக் கண்டு அணுகுவதா மின்பம்
அருந்துவதா மார்க்கமென் ருர். (82)

ஆரா வமுதமிகு மன்ருல்கீழ் வந்தவொளி
சீரான வேடமொன்றை சிந்திக்க—பாராய்
மவுனவெளந் தான்பெருகும் வந்ததுகை முத்தி
இவனுமில் பற்றுமறு மிங்கு. (83)

இங்குவுனைக் கண்டவ ரிதவசனங் கூருகிரா
ரங்கவற்கு நீபதிலு மாற்றுகிராய்—சங்கிக்க
நீசடமா யார்சடமென் நீள்பேத மாய்ந்திது
பேசிலேயே லேதுருவப் பேர். (84)

பேரொளியாய் தான்பிரமம் பேசறிய சுத்தமுமாய்
நேருதற்கு வானந்த நீள்முதலாய்—ஒருதற்கு
சாந்தமாய் மோனமாய் சர்வ வியாபகமாய்
வந்தலாம் நற்கருணை யியம்பு. (85)

இயம்ப வருளா யிரவுபக வில்லாச்
சுயம்புவாய் நிற்குணமாம் சோதி—யுயிற்குயிராய்
நின்று விளையாடி நிற்குமே யானந்த
மென்றுங் களித்த திது. (86)

இதமகித மின்றிங் கிருக்குமோர் தன்மை
முதுமறைக்கு மெட்டா முதலாய்—விதியா
லசையா நிலையா யறிஞருளத் தன்பாய்
இசையும் பொருளென்றே யெண் (87)

எண்ணி யிலக்கியமா மெட்டா திலக்கணத்தே
புண்ணியர்க்கு ளென்றும் பொருந்தினதே—கண்ணிற்
றெறியா தறிவாய் தெளிவிற் றெளிவாய்
உறுதிக் குறிதி யுரை. (88)

உரைக்க வதிதமது வொன்றினிலும் பற்றற்
றிருக்கும் பிறப்பிறப் பின்றியே—திருசியமில்
பாதப் பெருமைதனை பாரதுவே சொல்லுமது
வதமறத் தானிருக்க வே. (89)

வேதமுத லாகமமும் வேறு முளகலையும்
பேதமறக் காட்டுதல்போற் பேசுமே—ஆதலினு
லத்துவித மார்க்கத்தி னாமுத மேஞான்றும்
சித்த மதிலினிக்குஞ் சீர். (90)

சீரா ருலகினிடம் சென்றிளைத்தேன் சிந்தையுள்
நேரார் பொருளாம் நிலையில்லை—தேருதற்
கென்னையன்றி வேறுமில்லை யான்காணே னெவ்விதத்தும்
தன்னறிவிற் றூனறியத் தான். (91)

தான்காண வேண்டித் தனித்தேன் பலகாலம்
ஊன்மெலிந்த தன்றி யுணரவில்லை—கான்மலையும்
போயலைந்து மென்ன புலன்பொறியைக் கட்டியு
ளாய்ந்தவென்னைக் கண்டே னனு. (92)

அணுவி லணுவா யதுநானாய் நானதனுட்
டுணையின்றி தான்றனியாய்த் துன்னுங்—குணமே
யிருக்கு மதுவல்லா தேதுமில்லை யுற்று
விருக்கா தெனைவிட் டினி. (93)

இனிதி லினிதாகி என்றுந் தனித்தே
முனிவரெலாம் போற்றும் முதலாய்—நினைவிற்கு
எட்டா தசலமாய் யேகாந்தப் பேரொளியாய்
தட்டாமற் றட்டுந் தனி. (94)

தனியாகி சாக்ஷியாய் சச்சிதா னந்தக்
கனக சபையாடுங் காக்ஷி—அஞ்நியாய்
நிற்குணமாய் நின்மலமாய் நித்தமுமாய் சுத்தமுமாய்
அற்புதமாம் மெய்ப்பொருளென் றறி. (95)

அறிவி லறிவாகி யானந்தந் தானே
பிறிதிலுப சாந்தமதாய் பேணி--மறலி
பயமகற்றி யன்பருள் பாதமலர் தந்து
மயமாக்கு மவுன விளக்கு. (96)

விளக்கு மறிவிலற்கு மெய்போதங் காண
அளக்கு மவனுளத்தை யன்பால்--துளக்க
மறவிருந்து சொன்முடிவி லன்புமிகுந் தேறல்
அறநெறியென் றென்குருசொன் னன். (97)

ஆன்ற மவுனத் தழுந்தல் துரியநிறை
சான்றோர்க் கதுவாகுந் தாமுளத்—துான்றியே
நின்று வுணாவிழும் நீள்மலங்கெட் டாரமுத
மென்றும் புகழ் போதமே. (98)

மேல்கீ ழிரண்டின் விருப்புவெறுப் பில்லாத
பால்போன் மனத்துப் பருங்குரவன்--சால்பா
யுரைத்த மொழியறிந் துற்றபடி யின்நூல்
விரித்ததிங் கொன்றாக வே. (99)

வேம்பை விரும்ப விரும்பக் கரும்பெனுஞ்சொல்
ஓம்பலிலாத் கீது வுரைக்கவிலை—ஓமதுக்கு
ளுண்மை யறிவானந்த முற்றதினு லோர்நூறும்
வெண்பாவாய்க் கூருதற்கே வேள். (100)

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

178569
-600 008.

## இன்னூலாசிரியராலியற்றிய
### நூல்களிலச்சிட்டது.

கூரைநாடு வெள்ளந்தாங்கி ஐயனார்பதிகப் பாமாலை (1)

புள்ளிருக்கு வேளூர் வெண்பாவந்தாதி (2)

(அச்சிடக்கூடியது)

மோன விளக்கு (1)

அறிவானந்தபோதம் (2)

பஞ்சபக்ஷி தினசுருக்கக் கண்ணாடி (3)

மதிசூடி [illegible]லை (4)

தனியூர் சின்னசாமிபதிகப் பாமாலை (5)

க்ஷேத்திரபாலபுரம் சிதானந்த சுவாமிபதிகப் பாமாலை (6)

சேத்தூர் வினாயகர்பதிகப் பாமாலை (7)

காழி கந்தர் நக்ஷத்ரப்பாமாலை (8)

சோதிட அறிவானந்தவனுபவ சேகரம் (9)

மாயூரநாதர் அபையாம்பிகை கீர்த்தனை (10)

சுந்தர மாலை (11)